மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இவ்வேலையானது ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. "இதர சாலைகள்" என்ற தலைப்பில் போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாததால் இவ்வேலையானது பின்வரும் திட்ட காலங்களில் பரிசீலிக்கப்பட வேண்டியதாக உளளது என்று மாவட்ட ஆட்சியாளருக்கு தெரிவிக்கப்பட்டது.

குழந்தைகளுக்கான மருத்துவ மனைகள்

* 26 வின.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் எழும்பூரில் உள்ள குழந்தைகள் ஆஸ்பத்திரி யில் சராசரி ஒரு நாளைக்கு எத்தனை குழந்தைகளுக்கு வைத்தியம் பார்க்கப்படுகிறது ?

(இ) தற்போது அதில் பணிபுரியும் டாக்டர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 2,736 பேர்கள் தினந் தோறும் அங்கே மருத்துவ சிகிச்சை பெறுகிறார்கள்.

(இ) 53 டாக்டர்கள் பணியாற்றுகிறார்கள்.

திரு. கே. ஏ. வகாப் : எழும்பூரில் உள்ள குழந்தை ஆஸ்பத்திரியில் இன்னும் அதிகமாக குழந்தைகளைக் கொண்டு வருகிறார்கள். இருந்தாலும், போதிய கண்காணிப்பு செய்வதற்கு வசதியில்லை, டாக்டர்கள் குறைவு, இடவசதி குறைவு என்று கூறப்படுகிறது. இதையெல்லாம் அதிகப்படுத்தி விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்தி னிடம் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனைக்கு மட்டும் அதிகமாக குழந்தைகளைக் கொண்டு வருகிறார்கள் என்று சொல்லக் கூடாது. வீட்டுக்கு வீடு அதிகமாகக் குழந்தைகளைக் கொண்டு வருகிறார்கள். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, ஏறத்தாழ இந்தியாவிலேயே குழந்தைகள் மருத்துவமனைகளில் மிகப் பெரிய அளவில் கட்டப்பட்டிருக்கிற மருத்துவமனை இது. ஒரு நாளைக்கு குழந்தைகள் மட்டும் 2,736 பேர்கள் சிகிச்சை பெறுகிறார் கள் என்று சொல்லப்படுகிறது. சென்னையிலுள்ள பொது மருத்துவ மனையில் பெரியவர்கள் ஒரு நாளைக்கு 5,000 பேர்கள் சராசரியாக வருகிறார்கள். அந்த அளவில் பாதிக்கு மேலே குழந்தைகள் மட்டும்

1973 பிப்ரவரி 6]

இந்த மருத்துவமனைக்கு வரக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த மருத்துவமனை முன்னரே விரிவாக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், குழந்தைகளைப் பெறுகிறவர்கள், குழந்தைகளைப் பெற்றவர்கள் பெறுவதற்கு முன்னரும், பின்னரும் அதில் கவனம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன் : எழும்பூரில் இருக்கிற மருத்துவமனையில் இந்தத் துறையிலே வல்லுநர்களும், இருக்கிற மருத்துவ நிபுணர்களும் ஒரே இடத்தில் தேங்கிக் கிடக்கிருர்கள். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளுக்கு அவர்களைப் பிரித்து அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த மருத்துவமனை கல்விப் பயிற்சிக்குரிய மருத்துவமனை. இங்கே உள்ள மிகப் பெரிய நிபுணர்கள், பல பேர்களை குழந்தை வைத்தியத்தில் தேர்ச்சி பெறச் செய்து, நாடு முழுவதும் உள்ள மருத்துவ மனைகளில் அவர்கள் சென்று பணி யாற்றுவதற்கு வாய்ப்பு அளிப்பவர்களாக இருக்கிருர்கள். பயிற்சி அளிக்கின்ற கல்வி நிலையத்தோடு தொடர்பு கொண்ட மருத்துவமனை இது என்ற காரணத்திஞல் அவர்களையே பிரித்து அனுப்புவது இயலாத காரியம்.

* 27 விஞ—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடார்க்காடு மாவட்டம், வேலூரில், குழந்தைகளுக் கென்று தனி ஹாஸ்பிட்டல் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் செயல்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஏற்கனவே தனிப்பட்ட வார்டு உள்ளது.

(இ) இக் கேள்விக்கிடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : இப்பொழுது கேட்கப்பட்ட கேள்வியின் அடிப்படையிலே அந்தந்த மாவட்டத்திலே இப்படிப்பட்ட குழந்தைகள் வைத்திய வசதி இருந்தாலும், சென்னையில் வருகிற குழந்தைகளைப் போலவே அவர்களுக்குள்ள அப்படிப்பட்ட வசதிகளை சிறிய அளவிலாவது செய்து, ஒரு சிறிய குழந்தைகள் மருத்துவ விடுதியை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் ஆரம்பிக்க அரசு முன்வருமா ?